**SET A**

Roll No. | | | | | | | |

Code No : BEM8202

**YEARLY ASSESSMENT**
**CLASS – VIII**
**TAMIL**

Time allowed: 2½ hour Maximum Marks: 80

**General Instructions:**

(i) The question paper is divided into **seven** sections.

| | | |
|---|---|---|
| பகுதி - அ | : | 11 Marks |
| பகுதி- ஆ | : | 6 Marks |
| பகுதி - இ | : | 10 Marks |
| பகுதி - ஈ | : | 10 Marks |
| பகுதி - உ | : | 24 Marks |
| பகுதி - ஊ | : | 4 Marks |
| பகுதி - எ | : | 15 Marks |

(ii) You may attempt any section at a time.
(iii) All questions of that particular section must be attempted in the correct order.

## பகுதி - அ

**I. பொருள் தருக:** 4x1=4

1. அருவர் - 2. வையம் - 3. தெளிவு- 4. வாரி -

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக:** 5x1=5

5. பின்னலாடை நகரமாக _____ விளங்குகிறது.

6. செவ்விந்தியர்கள் நிலத்தைத் _____ மதிக்கின்றனர்.

7. ஐந்தாம் உலகத் தமிழ்மாநாடு நடைபெற்ற இடம் _____.

8. அடுத்தவர் வாழ்வைக் கண்டு _____ கொள்ளக்கூடாது.

9. காட்டிலிருந்து வந்த _____ கரும்பைத் தின்றன.

**III. சேர்த்து எழுதுக:** 2x1=2

10. குணங்கள் + எல்லாம் 11. விழித்து + எழும்

## பகுதி - ஆ

**IV. மனப்பாடப் பகுதி:** 2+4=6

12. அ) "பண்புடையார்" எனத் தொடங்கும் திருக்குறளை அடிமாறாமல் எழுதுக.

ஆ) "சுத்தமுள்ள" - எனத் தொடங்கும் "வருமுன் காப்போம்" பாடலின் முதல் நான்கு வரிகளை மட்டும் அடிமாறாமல் எழுதுக.

## பகுதி -இ

**V. கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:** 5x1=5

13. தென்றல் அசைந்துவரும் தென்தமிழ் நாட்டில் அமைந்த திருக்குற்றாலம், மலைவளம் படைத்த பழம்பதியாகும். அம்மலையிலே கோங்கும், வேங்கையும் ஓங்கி வளரும். குரவமும் முல்லையும் நறுமணங் கமழும். கோலமாமயில் தோகை விரித்தாடும். தேனுண்ட வண்டுகள் தமிழ்ப் பாட்டிசைக்கும். அத்தகைய மலையினின்று விரைந்து வழிந்து இறங்கும் வெள்ளருவி வட்டச் சுனையிலே வீழ்ந்து பொங்கும் பொழுது சிதறும் நீர்த்திவலைகள் பாலாவிபோற்பரந்து எழுந்து மஞ்சினோடு சேர்ந்து கொஞ்சிக் குலாவும். வேனிற்காலத்தில் திருக்குற்றால மலையில் வீசும் மெல்லிய பூங்காற்று மருந்துச் செடிகொடிகளின் நலங்களைக் கவர்ந்து வருதலால், நலிந்த உடலைத் தேற்றும் நன்மருந்தாகும்.

**வினாக்கள்:**

அ. தென்தமிழ் நாட்டில் மலைவளம் படைத்த பழம்பதி எது?

ஆ. உரைப்பத்தியில் இடம் பெற்றுள்ள மரங்களின் பெயர்களை எழுதுக.

இ. தமிழ்ப் பாட்டிசைக்கும் உயிரினம் எது?

ஈ. அருவியினின்று சிதறும் நீர்த்திவலைகளுக்குக் கூறப்பட்ட உவமை யாது?

உ. திருக்குற்றால மலையில் வீசும் மெல்லிய பூங்காற்றின் பயன் யாது?

**VI. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:** 5x1=5

14. பனை மரமே பனை மரமே

ஏன் வளந்தே இத் தூரம்?
குடிக்கப் பதனியானேன் !
கொண்டு விற்க நுங்கானேன் !
தூரத்து மக்களுக்குத்
தூதோலை நானானேன் !
அழுகிற பிள்ளைகட்குக்
கிலுகிலுப்பை நானானேன் !
கைதிரிக்கும் கயிறு மானேன் !
கன்றுகட்டத் தும்புமானேன் !

- நாட்டுப்புறப்பாடல்

**வினாக்கள்:**

அ. பனை மரம் தரும் உணவுப் பொருள்கள் யாவை?

ஆ. பனை மரம் யாருக்குக் கிலுகிலுப்பையைத் தரும்?

இ. "தூதோலை" என்னும் சொல்லைப் பிரித்து எழுதுக.

ஈ. பனைமரம் மூலம் நமக்குக் கிடைக்கும் பொருள்களைப் பட்டியலிடுக.

உ. பாடலுக்கு ஏற்ற தலைப்பை எழுதுக.

## பகுதி - ஈ

**VII. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 4x1=4

15. உடனிகழ்ச்சிப் பொருளில் _____ வேற்றுமை வரும்.

அ. மூன்றாம் ஆ. நான்காம் இ. ஐந்தாம் ஈ. ஆறாம்

16. "பாலாடை" - இச்சொல்லுக்குரிய புணர்ச்சி _____.

அ. இயல்பு ஆ. தோன்றல் இ. திரிதல் ஈ. கெடுதல்

17. இரட்டுறமொழிதல் அணியின் வேறு பெயர் _____.

அ. பிறிது மொழிதல் ஆ. வேற்றுமை இ. உவமை ஈ. சிலேடை

18. அசை _____ வகைப்படும்.

அ. இரண்டு ஆ. மூன்று இ. நான்கு ஈ. ஐந்து

**VIII. கீழுள்ள இலக்கண குறுவினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளி:** 3x2=6

19. பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
20. வேற்றுமை அணி என்றால் என்ன?
21. உடனிகழ்ச்சிப் பொருள் என்றால் என்ன?
22. இயல்பு புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
23. தொகைநிலைத் தொடர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

## பகுதி - உ

**IX. கீழ்க்காணும் குறுவினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் விடையளி:** 5x2=10

24. அம்பேத்கர் தன் பெயரை ஏன் மாற்றிக் கொண்டார்?
25. இவ்வுலகம் யாரால் இயங்குவதாக திருக்குறள் கூறுகிறது?
26. யாருக்கு எமனைப் பற்றிய அச்சம் இல்லை?
27. திரைத்துறையில் எம்.ஜி.ஆரின் பன்முகத் திறமைகள் யாவை?
28. இருண்ட ஆட்சி என எதனை மீரா குறிப்பிடுகிறார்?
29. கொங்கு நாட்டில் பாயும் ஆறுகள் யாவை?
30. எதனைத் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை எனச் சியாட்டல் கூறுகிறார்?

**X. கீழ்க்காணும் சிறுவினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளி:** 3x3=9

31. எவையெல்லாம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என்று சியாட்டல் கூறுகிறார்?
32. சோழ வீரர்களைக் கண்ட கலிங்கப் படை வீரர்களின் செயல்களாகக் கலிங்கத்துப்பரணி கூறுவன யாவை?
33. மக்களுக்கு செய்ய வேண்டிய தொண்டு குறித்துத் திருமூலர் கூறுவன யாது?
34. அம்பேத்கரின் முதல் தேர்தல் வெற்றி குறித்து எழுதுக.
35. அயோத்திதாசரின் இதழ்ப்பணி பற்றி எழுதுக.

**XI. கீழ்க்காணும் நெடுவினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளிக்க:** 1x5=5

36. வாழும் முறை, சமத்துவம் ஆகியன பற்றி அயோத்திதாசரின் சிந்தனைகளைத் தொகுத்து எழுதுக.

37. கொங்கு நாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டு வாணிகம் குறித்து எழுதுக.

## பகுதி - ஊ

**XII. கீழ்க்காணும் சிந்தனை வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி:** 2x2=4

38. ஒரு நாட்டின் பாதுகாப்பிற்குத் தேவையானவை எவை எனக் கருதுகிறீர்கள்?

39. மழைவளம் பெருக நாம் செய்ய வேண்டுவன யாவை?

40. வாழ்வில் உயர நம்பிக்கையைப் போன்று வேறு என்னென்ன பண்புகள் தேவை என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

## பகுதி - எ

**XIII. விரிவான விடை தருக (ஏதேனும் ஒன்று மட்டும்) :** 1x5=5

41. குழந்தை கிருஷ்ணாவின் பண்பு நலன்களைப் பற்றி தொகுத்து எழுதுக.

42. அறிவுசால் ஔவையார் - என்னும் நாடகத்தைச் சிறுகதை வடிவில் சுருக்கமாக எழுதுக.

**XIV. கட்டுரை (ஏதேனும் ஒன்று மட்டும்):** 1x5=5

43. "தேசிய ஒருமைப்பாடு" பற்றி கட்டுரை எழுதுக.

44. "நீ விரும்பும் புலவர்" குறித்து கட்டுரை எழுதுக.

**XV. கடிதம் (ஏதேனும் ஒன்று மட்டும்):** 1x5=5

45. உன் ஊரில் மின்விளக்கு வசதி வேண்டி மின் வாரியத் தலைவருக்கு ஒரு கடிதம் எழுதுக

46. அகராதி புத்தகம் வாங்கி அனுப்புமாறு உறவினர் ஒருவருக்கு கடிதம் எழுதுக.